முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1317

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.05.2023, திங்கட்கிழமை

1. ஞானிகளை உலகமெங்கும் படைக்க வேண்டி
ஞானமருளி அவதாரம் புரிந்தநல்
ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 25ம் நாள், 08.05.2023, திங்கட்கிழமை)
உரைத்திடுவேன் சோபகிருது தகர்திங்கள் தன்னில்
ஞானவான்கள் உன்சக்தி வழிதான்
ஞாலமதில் உலகமெங்கும் பரவிநின்று
3. நின்றுமே கலியிடரையே வெல்லக்கூடிய
நிலை தன்மைகொண்ட சூழல்படைத்து
அழியாமை பெற்ற மக்களாக
அரங்கன் உன்னால் அவரவரும் ஞானிகளாக
4. ஆகவே மாற்றம் காண்பது உறுதி
அற்புதத்தை ஆறுமுகன்யான் உன்வழி
செகமெல்லாம் நடத்த இருக்க
செப்பிடுவேன் உன்தொடர்பில் உள்ள மக்களெல்லாம்
5. தயவாக அன்னதான சேவையோடு
தக்கதொரு சுத்தசைவநெறி பிறழா வண்ணம்
வண்ணமுடன் கடைபிடித்து உந்தன்வழி
வள்ளல்தன்மை கூடும்படி ஆற்றல்பெருக
6. பெருகவே சரணாகதி முழுமைகொண்டு
பிரணவ குடில் தொடர்பில் இருந்துவர
வருகின்ற மக்கள் அனைவருக்கும்
வல்லமைபட ஞானிகளாகும் உயர்வாய்ப்பு

7. வாய்ப்பு தந்து ஆறுமுகன்யான்
வழிநடத்துவேன் அரங்கன்உன் சக்தியாக
ஆகவே அற்புதத்தை சடுதி நடத்தி
அகிலமெங்கும் ஞானஆட்சி மலரச்செய்வேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–